நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No.180/2019**

**P.W. 7 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி )**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | செந்தில்குமார் |
| தந்தை / கணவர் பெயர் | : | சின்னுசாமி |
| கிராமம் | : | 175A, பொன்நகர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 7** |
| வயது | : | 45 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஆகஸ்ட் மாதம், 09–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.16PM)

1. நான் தற்போது சின்னகோனூர் கால்நடை மருந்தகத்தில் கால்நடை உதவி மருத்துவராக பணி புரிந்து வருகிறேன். 2012ம் ஆண்டில் நான் காவேரி கிராஸ் கால்நடை மருந்தகத்தில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வந்தேன். 12.11.2012ம் தேதி நான் மருத்துவமனையில் பணியில் இருந்தபோது மேட்டூர் வனச்சரக

அலுவலகத்தில் இருந்து மேட்டூர் வனச்சரகத்திற்குட்பட்ட தெற்கு உள்ளூர் தண்டா செட்டிபட்டி கிராமத்தில் இறந்த நிலையில் கிடைத்த உடும்பை பிரேத பரிசோதனை செய்த வேண்டுகோள் கடிதம் கொடுத்தனர்.

2. அதற்கிணங்க நான் 12.11.2012 ம் தேதி நான் மேட்டூர் வனச்சரக அலுவலகம் சென்று அங்கு இறந்த நிலையில் இருந்த உடும்பை மாலை 4.30 மணிக்கு பிரேத பரிசோதனைக்கு எடுத்துகொண்டேன். அந்த உடும்பானது 4 ½ வயதுடைய பெண் உடும்பு ஆகும். அந்த உடும்பானது 11.11.2012 ம் தேதி இரவு 8.00 மணி அளவில் இறந்த நிலையில் வனஅலுவலரால் கைப்பற்றப்பட்டது.

3. மேற்படி இறந்த உடும்பானது மாமிசம் உண்ணும் விலங்கினால் கடிக்கப்பட்டு பற்களால் துளைக்கப்பட்ட காயம் இருந்தது. அந்த காயம் 0.5 செ.மீ ஆழத்தில் வலது முன்கையின் அடிப்பகுதியில் இருந்தது. முதுகில் தோள்பட்டை அருகில் வலது புறத்தில் 6 செ.மீ மற்றும் 4 செ.மீ அளவுள்ள சிராய்ப்பு காயங்கள் இருந்தது. நுரையீரலில் கண்ணிபோன காயம் இருந்தது.

4. சின்ன சின்ன ரத்த திட்டுகள் உறைந்த நிலையில் உடும்பின் இதய மேல் அறையில் இருந்தது. இறுதியாக என்னுடைய பிரேத பரிசோதனை அறிக்கையின் படி இறந்த உடும்பானது மாமிசம் உண்ணும் விலங்கு கடித்த அதிர்ச்சியினாலும் கடித்த காயத்தினாலும் இறந்துள்ளது என்று நான் சான்று அளித்தேன். மாலை 5.30 மணி அளவில் பிரேத பரிசோதனையை முடித்து வனத்துறை அலுவலரிடம் ஒப்படைத்தேன். ( **உடும்பின் பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

5. பிரேத பரிசோதனை அறிக்கை முடித்து மேட்டூர் வனச்சரக அலுவலகத்தில் உரிய அதிகாரிகளிடம் அனுமதி பெற்று இறந்து போன உடும்பை வனச்சரக அலுவலகத்தில் முறைப்படி உடும்பை அடக்கம் செய்தனர். நானும் அந்த சமயத்தில் அங்கு இருந்தேன். பிரேத பரிசோதனை அறிக்கை முடித்து வனத்துறையினிரிடம் ஒப்படைத்தற்கான கடிதத்தை தாக்கல் செய்கிறேன். **(மேற்படி கடிதம் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**எதிரி தரப்பில் தற்போது குறுக்கு விசாரணை இல்லை தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–12.38PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**